**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 107/2023**

**Prosecution witness : அ.சா.12** **Date : 05.12.2023**

| | |
|---|---|
| **Name : உமா பிரியதர்ஷினி** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused 1 – 3 present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

1) நான் தற்பொழுது மேட்டூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 17.10.2022–ம் தேதி மேட்டூர் அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் நான் நிலையப் பொறுப்பில் இருந்த போது, வினுப்பிரியா என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று, முதல் CSR.No.162/2022 எண்ணில் சமுதாய பதிவேடு பதியப்பட்டு, விசாரணைக்கு பிறகு முகாந்திரம் இருந்த காரணத்தால் புகார் மனுவின் தன்மைக்கு ஏற்ப **நி.கு.எண்.12/2022 u/Sec.494, 498(ஏ), 506(1) இதச** ஆக வழக்கு பதிவு செய்தேன். CSR.No.162/2022 **அ.சா.ஆ.4** முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.5** ஆகும்.

3. கடந்த 19.10.2022 ம் தேதி மதியம் 02.15 மணிக்கு சம்பவ இடமான குக்கல்பட்டி, வாதி வீட்டருகில் சென்று சாட்சிகள் குமார் மற்றும் தினேஷ் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்தேன். வரைபடம் **அ.சா.ஆ 6** ஆகும்.

4. பின்பு சாட்சிகள் வினுபிரியா, குமார், தினேஷ், நித்யா, லோகேஷ், செல்வி, அசோக், ஆனந்த், தங்கராஜ், கௌதம், கோகுல் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் 2வது திருமணம் குறித்து 1–ம் எதிரிக்கும், நித்யாவுக்கும் நடந்த திருமணம் குறித்த திருமண புகைப்படம், மண்டப ரசீது ஆகியவற்றின் நகல் பெற்றுக்கொண்டேன். 1–ம் எதிரிக்கும்

நித்யாவுக்கும் நடந்த திருமணம் குறித்த திருமண புகைப்படம் **அ.சா.ஆ 7** ஆகும். (அசல் புகைப்படத்துடன் ஒப்பிடபட்டது). **(எதிரிதரப்பு வழக்கறிஞர் இந்த ஆவணத்திற்கும் 1–ம் எதிரிக்கும் சம்மந்தம் இல்லை என்றும் அது குறித்து எந்த விதமான உறுதியீட்டு சாட்சியும் இல்லாத நிலையில் குறியீடு செய்ய ஆட்சேபனை செய்யப்பட்டு, இது குறித்து பிறகு தான் முடிவுசெய்யப்படவேண்டும் என்பதால் ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது)** திருமண மண்டப ரசீது **அ.சா.ஆ 8** ஆகும். **(எதிரிதரப்பு வழக்கறிஞர் இந்த ஆவணத்திற்கும் 1–ம் எதிரிக்கும் சம்மந்தம் இல்லை என்றும் அது குறித்து எந்த விதமான உறுதியீட்டு சாட்சியும் இல்லாத நிலையில் குறியீடு செய்ய ஆட்சேபனை செய்யப்பட்டு, இது குறித்து பிறகு தான் முடிவுசெய்யப்படவேண்டும் என்பதால் ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது)**

5) 1–ம் எதிரிக்கும் அ.சா.1 க்கும் ஆண் மற்றும் பெண் குழந்தை பிறந்தது அந்த ஆண் குழந்தையின் பிறப்பு சான்றிதழ் **அ.சா.ஆ.9** ஆகும். பெண் குழந்தை பிறப்பு சான்றிதழ் **அ.சா.ஆ 10** ஆகும். இவ்வழக்கில் எதிரிகள் மூன்றுபேரும் சென்னை உயர் நீதிமன்றத்தில் கடந்த 04.11.2022–ம் தேதி முன்ஜாமின் பெற்றதால் கைது செய்ய மார்க்கமில்லை. பின்னிட்டு, இவ்வழககின் 1–ம் எதிரி சேலம் ஆயுத படையில் பணிபுரிந்ததால் அவரது அலுவலகத்திற்கு வழககு குறித்து தகவல் தெரிவிக்கப்பட்டதன் பேரில் கடந்த 25.10.2022–ம் தேதி இடைக்கால பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளார். மேலும், எவ்வித முன்அறிவிப்பும் இல்லாமல் சேலம் தமைமையகத்தை விட்டு வெளியே செல்லக்கூடாது என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அதற்கான உத்தரவு நகல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கில் 1–ம் எதிரி அ.சா.1 க்கு தெரியாமல் நித்யா என்பவரை திருமணம்செய்து இருவரும் இல்லற வாழ்க்கையின் பயனாக ஆண் குழந்தை பெயர் துருவ சபரீஷ் என்பவர் ஸ்ரீ மருத்துவமனை கோயம்புத்தூரில் பிறந்தது. துருவ சபரீஷ் பிறப்பு சான்றிதழ் **அ.சா.ஆ 11** ஆகும். **(எதிரிதரப்பு வழக்கறிஞர் இந்த ஆவணத்திற்கும் 1–ம் எதிரிக்கும் சம்மந்தம் இல்லை என்றும் அது குறித்து எந்த விதமான உறுதியீட்டு சாட்சியும் இல்லாத**

**நிலையில் குறியீடு செய்ய ஆட்சேபனை செய்யப்பட்டு, இது குறித்து பிறகு தான் முடிவுசெய்யப்படவேண்டும் என்பதால் ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது)**

6) இவ்வழக்கின் 1–ம் எதிரி பட்டியல் சாட்சி நித்யா என்பவரை கோவையில் பணிபுரிந்த போது, 2 வதாக திருமணம் செய்து கொண்டார் என்பதை சாட்சிகளின் வாயிலாக தெரிந்துகொண்டேன். இதுபற்றி அ.சா.1, 1–ம் எதிரியின் பெற்றோர்களான 2, 3 ம் எதிரிகளிடம் தெரியபடுத்தியபோது, நாங்கள் தான் திருமணம் செய்து வைத்தோம் என்று சொல்லியும், முதல் திருமணத்தை மறைத்து 2 வது திருமணம் செய்து வைத்ததாக சொன்னார்கள்.

7) 2 வது எதிரி மற்றும் 3 வது எதிரியிடம் வாதி தன் கணவர் 2 வது திருமணம் செய்து கொண்டது பற்றி கேட்டதற்கு திருமணம் செய்து எங்கள் வீட்டிற்கு வரும் போது, உனது வீட்டில் இருந்து எந்தவிதமான வரதட்சனையும், கொண்டுவரவில்லை என்று மிரட்டியதற்காகவும், தங்கள் மகன் கோவிந்தனுக்கு முதல் திருமணம் செய்த பிறகு 2 ம் திருமணம் செய்து வைத்தோம் என்று கூறியதற்காகவும் 2,3 எதிரிகள் மீது வழக்கு பதியப்பட்டது.

8) 1–ம் எதிரியான வாதியின் கணவர் வாதியிடம் தான் 2 வது திருமணம் செய்து கொண்ட தகவலை உனது அம்மா மற்றும் உனது அண்ணன்களிடம் சொன்னாலோ அல்லது காவல் நிலையத்திற்கு புகார் கொடுத்தாலோ வாதியை கொலை செய்துவிடுவதாக மிரட்டியதற்காக ச/பி 506(1) இதசவாக வழக்கு பதியப்பட்டது.

9) இவ்வழக்கின் புலன் விசாரணையில் எதிரிகள் மீதான குற்றம் உண்மை எனத் தெரிய வந்ததால் எதிரிகள் மீது கடந்த 05.02.2023 ம் தேதி **நி.கு.எண்.12/2022 u/Sec.494, 498(ஏ), 506(1) இதச** ஆகிய பிரிவுகளின் கீழ் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்தார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>

10) 2 வது திருமணம் செய்தது குறித்து புகைப்படம் மற்றும் ஆவண சாட்சியம் இந்த வழக்கில் சேகரிக்கப்படவில்லை என்றால் சரிதான். 2 வது திருமணம்

செய்த நபருக்கும் 1–ம் எதிரிக்கும் குழந்தைபேரு உள்ளதா என்றால் உள்ளது. அதற்கான பிறப்பு சான்றிதழ் உள்ளது. பார்வை மகசரில் பொதுவாக நேரம், தேதி, இடம் குறிபிடுவது வழக்கம் என்றால் சரிதான். நான் தயார் செய்த பார்வை மகசரில் நேரம் குறிப்பிடபடாமல் பிறகு சேர்க்கப்பட்டுள்ளது என்றால் அவ்வாறு இல்லை. அ.சா.ஆ.2 ல் நேரம் குறிபிடபட்ட மை மற்ற விவரங்களின் மை வேறுபட்டுள்ளது என்றால் சரியல்ல. ஒரே நபர் எழுதியதாகத்தான் உள்ளது.

11) 1–ம் எதிரி கோயம்புத்தூரில் வசித்த இடத்தில் சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பெற்றேனா என்றால் இல்லை. வரைபடத்தில் சம்பவயிடம் யாருடைய இடம் என்பதை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். 2 வது திருமணம் செய்து கொண்டதற்கான ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் கொடுத்துள்ளேன். யாரிடமிருந்து திருமண புகைப்படம் மற்றும் திருமண மண்டப ரசீது பெற்றேன் என்றால் அ.சா.1 னிடமிருந்து பெற்றேன். அ.சா.1 தனது வாக்குமூலத்தில் திருமண புகைப்படம் மற்றும் திருமண மண்டப ரசீது ஒப்படைத்தது குறித்து சொல்லவில்லை என்றால் சரிதான்.

12) கைபற்றுதல் மகசர் தயார் செய்து புகைப்படத்தை பெற்றேனா என்றால் இல்லை. அ.சா.1 ன் அண்ணன் கார்த்திக் லோகேஸ்வரன் காவல் துறையில் பணியாற்றி வருகிறார் என்றால் சரிதான். அ.சா.1 ன் போனில் பேசியநபரை விசாரித்து இந்த வழக்கில் சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். அ.சா.1 ஐ எத்தனை முறை விசாரித்தேன் என்றால் 2 முறை விசாரித்தேன். எந்த தேதியில் விசாரித்தேன் என்றால் 19.10.2022 மற்றும் 05.02.2023 ம் தேதிகளில் விசாரித்தேன்.

13) வரதட்சனை கேட்டு மிரட்டியதாக சொல்லியுள்ள நிலையில், தனிப்பட்ட முறையில் அ.சா.1 புகார் கொடுத்தாரா என்றால் இல்லை. அ.சா.1 விசாரணையில் தனிப்பட்ட முறையில் அவரிடம் வாக்குமூலம் பெறவில்லை என்றும், விசாரணை செய்யவில்லை என்றும் கூறியுள்ளார் என்றால் சரியல்ல. இந்த வழக்கு பொய்யான வழக்கு என்றும், நான் சொல்வது போல் சம்பவம்

நடைபெறவில்லை என்றும், அ.சா.1 கொடுத்த புகாரின் போரில் நான் சரவர புலன்விசாரணை செய்யாமல் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

ஒம்/– தே.மயில்சாமி,
**நீதித்துறை நடுவர் எண்.2,**
**மேட்டுர்.**